இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023க்கான பனியனை (TSHIRT) நேற்று (22.05.2023) அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் பொது மேலாளர் (நிர்வாகம்) வே. மணிகண்டன், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு தங்கும் விடுதி மற்றும் உணவகத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (21-5-2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட வருவாய் அலுவலர் சிவ ருத்ரய்யா ஆகியோர் உள்ளனர்

### கூட்டாட்சித் தத்துவத்தையே பா.ஜ.க. அரசு கேலிக் கூத்தாக்கியுள்ளது!

# ஆளுநரிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் முயற்சி!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே 23 -

ஒன்றிய அரசுக்கு எதிராக உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து புதிய சட்டத்தை உருவாக்கி ஆளுநருக்கு அதிகாரம் கொடுக்க முயற்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்றும் இது கூட்டாட்சி தத்துவத்தையே பா.ஜ.க. அரசு கேலிக்கூத்தாக்கியுள்ளது என ‘தீக்கதிர்’ நாளேடு தனது 22.5.2023 தேதிய இதழில் தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

தேசியத் தலைநகர குடிமைப் பணி ஆணையத்தை உருவாக்குவதற்கான அவசரச் சட்டத்தை பிறப்பித் துள்ளதன் மூலம் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை ஒன்றிய அரசு நீர்த்துப் போகச் செய்துள்ளது. மேலும் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தில்லி மாநில அரசின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தில்லியில் குடிமைப் பணி அதிகாரிகளை யார் கட்டுப்படுத்துவது என்று ஒன்றிய அரசுக்கும் தில்லி மாநில அரசுக்கும் இடையே தொடர்ந்து சர்ச்சை எழுந்து வந்தது. துணை நிலை ஆளுநர் மூலம் தில்லி அரசின் அதிகாரத்தை ஒன்றிய அரசு அபகரித்து வந்தது.

இதை எதிர்த்து தில்லி மாநில ஆம் ஆத்மி அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் தில்லிக்கு மாநில அந்தஸ்து இல்லையென்றாலும் சட்டம் இயற்றும் அதிகாரம் அம்மாநில சட்டமன்றத்திற்கு உள்ளது; ஜனநாயக நாட்டில் துணை நிலை ஆளுநரை விட மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசிடமே அதிகாரம் இருக்க வேண்டும். குடிமைப் பணி அதிகாரிகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் தில்லி அரசுக்கே உள்ளது என்றும் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது.

நீண்ட நெடிய விசாரணைக்குப் பின்பே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் இந்த தீர்ப்பை ரத்து செய்யும் வகையில் ஒன்றிய அரசு அவசரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இதன் படி தேசிய தலைநகர குடிமைப்பணி ஆணையத்திற்கு தில்லி முதல்வர் தலைமை தாங்

தீக்கதிர்
2023 மே 22 திங்கட்கிழமை
அத்துமீறும் அவசரச் சட்டம்
தேசியத் தலைநகர குடிமைப் பணி ஆணையத்தை உருவாக்குவதற்கான அவசரச் சட்டத்தை பிறப்பித்துள்ளதன் மூலம் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை ஒன்றிய அரசு நீர்த்துப் போகச் செய்துள்ளது. மேலும் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தில்லி மாநில அரசின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.
தில்லியில் குடிமைப் பணி அதிகாரிகளை யார் கட்டுப்படுத்துவது என்று ஒன்றிய அரசுக்கும் தில்லி மாநில அரசுக்கும் இடையே தொடர்ந்து சர்ச்சை எழுந்து வந்தது. துணை நிலை ஆளுநர் மூலம் தில்லி அரசின் அதிகா

குவார் என்றும், ஆனால் நிர்வாகியாக துணை நிலை ஆளுநரே இருப்பார் என்றும் குடி மைப்பணி அதிகாரிகள் நியமனம் மற்றும் பணி மாறுதல் விவகாரத்தில் துணைநிலை ஆளுநரின் முடிவே இறுதியானது என்றும், இந்த அவசரச் சட்டம் கூறு கிறது. இதற்கு குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்துள்ளார்.

இத்தகைய அவசரச் சட்டத்தை நிறைவேற்றி யுள்ளதன் மூலம் உச்சநீதிமன்றம் அங்கீகரித்த கூட்டாட்சித் தத்துவத்தை ஒன்றிய அரசு கேலிக் கூத்தாக்கியுள்ளது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிகாரம் என்பதை அர்த்தமிழக்கச் செய்து ஒன்றிய அரசின் கைப்பாவையான துணை நிலை ஆளுநருக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. இதன்மூலம் தில்லி அரசின் அதிகாரத்தை ஒன்றிய அரசு கைப்பற்றிக் கொள்ள முயல்கிறது.

குடிமைப்பணி அதிகாரிகள் நியமனம் மற்றும் பணி மாறுதல் ஒன்றிய அரசிடம் இருந்தால் மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசின் உத்தரவுகளுக்கு அவர்கள் கட்டுப்பட மாட்டார்கள். முடிந்தவரை முட்டுக் கட்டை போட்டு ஒன்றிய அரசுக்கு ஒத்திசைவாக நடந்து கொள்ளவே முயல்வார்கள். இதன் மூலம் நிர்வாக முடக்கம் ஏற்படும். மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்ட மன்றம் என்பது வெறும் அலங்கார சபையாகவே இருக்கும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொண்டே மறுபுறத்தில் அந்த தீர்ப்பை ஒன்றுமில்லாமல் செய்யும் அவசரச் சட்டத்தை நிறைவேற்றி யிருப்பது ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கையே காட்டுகிறது.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் தனது கண்டனத்தை பதிவிட்டுள்ளது.

### சென்னை வெளிவட்டச் சாலை - முடிச்சூரில்

# தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடம்!

## அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன் - பி.கே. சேகர்பாபு ஆய்வு!

சென்னை,மே.23-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023 -24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு இன்று (22.5.2023) செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர், சென்னை வெளிவட்டச் சாலையில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினை தேர்வு செய்வது தொடர்பாகவும், முடிச்சூர், சீக்கனான் ஏரியை ரூ.2கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாகவும், முடிச்சூர், இரங்கா நகர் குளத்தினை ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாகவும், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பம்மல், ஈஸ்வரி நகரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்கா அமைப்பது தொடர்பாகவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஆலந்தூர், புது தெருவில் ரூ.10கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக் கூடம் அமைப்பது தொடர்பாகவும் ஆகிய இடங்களுக்கு நேரடியாக சென்று களஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023 -24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளை முதலமைச்சர் விரைவுபடுத்த வேண்டுமென்ற உத்தரவின் அடிப்படையில் 50 இடங்களையும் நேரடியாக சென்று களஆய்வு செய்ய முடிவு செய்து, சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளில் இன்றோடு (22.5.2023) 28 இடங்களில் கள ஆய்வு செய்திருக்கின்றோம். மீதமுள்ள 6 இடங்களையும் இந்த மாத இறுதிக்குள் நேரடியாகச் சென்று களஆய்வில் ஈடுபடவிருக்கின்றோம்.

மேம்பாலங்களுக்கு கீழிருக்கின்ற பகுதிகளை அழகுபடுத்துதல், உடற்பயிற்சி கூடங்கள் அமைத்தல், வகுப்பறைகள் கட்டித் தருதல், திருமண மண்டபங்கள் ஏற்படுத்தி தருதல், அதோடு சலவைக் கூடங்களை மேம்படுத்தி தருதல், பேருந்து முனையங்களை மேம்படுத்தித் தருதல் என்று பல்வேறு வகையான பணிகளை இந்த 34 பணிகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு பார்வையிடுகின்ற பணிகள் சுமார் ரூ.2 கோடி செலவில் முடிச்சூர் சீக்கனான் ஏரியை மேம்படுத்துதல், அதோடு ரூ.1.50 கோடி செலவில் முடிச்சூர், ரங்கா நகர் குளத்தை மேம்படுத்துதல், பல்லாவரம் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் ரூ.2 கோடியில் பம்பல், ஈஸ்வரி நகரில், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலை மேம்படுத்துதல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களுடைய தொகுதியான ஆலந்தூர், புதுத்தெருவில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஒரு திருமண மண்டபத்தை ஏற்படுத்தி தருதல் ஆகிய பணிகளை இன்றைக்கு மேற்கொள்ள இருக்கின்றோம்.

ஒட்டுமொத்தமாக அறிவிக்கப்பட்ட இந்த 34 பணிகளையும் மூன்று மாதத்திற்குள்ளாக இந்த பணிகளை துவக்கிட வேண்டி திட்டமிட்டு, தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்றோடு 28 பணிகளுக்கான ஆய்வு நிறைவு பெறுகின்றது. மீதம் இருக்கின்ற 6 இடங்களையும் இந்த மாத இறுதிக்குள்ளாக ஆய்வு செய்து முடித்து அவைகளையும் பணிகளை துவக்குவதற்குண்டான அனைத்து பணிகளையும் விரைவுபடுத்தக் கேட்டுக்கொண்டிருக்கிறாம். அதேபோல, தனியார் ஆம்னி பேருந்துகளை நிறுத்து வதற்குண்டான இடத்தை இன்று (22.5.2023) முடிச்சூர், சென்னை வெளிவட்டச் சாலையில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.29 கோடி செலவில் ஆம்னி பேருந்து நிலையத்தை அமைப்பதற்குகள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை பொறுத்தவரையில் முன்னதாக இந்த முனையத்திற்கு வரும் பேருந்துகளின் போக்குவரத்தை கருத்தில் கொள்ளாமல் வடிவமைத்திருக்கிறார்கள். இந்த பேருந்து நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் போது என்னன்ன அடிப்படைத் தேவைகள் என்று ஒவ்வொன்றையும் ஆய்வு செய்கின்ற போது அந்த மக்களுடைய அடிப்படைத் தேவைகள் எதையும் கணக்கிடாமல் இந்த பேருந்து முனையம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த பேருந்து நிலையத்திற்கு உண்டான அணுகு சாலைகள், அதேபோல் இந்த பேருந்து நிலையத்திற்கு வருகின்ற போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு உண்டான திட்டமிடல் போன்றவற்றை வகளை கணக்கிட்டு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். ஜூன் மாத இறுதிக்குள் இதை துவக்க வேண்டுமென்ற நிலைபாடு இருந்தாலும், பேருந்து முனையம் துவக்கப்பட்ட பிறகு மக்களுடைய தேவைகள் எவையும் விட்டுவிடாமல் மக்களுடைய பயன்பாட்டிற்கு வருகின்ற போது மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குண்டான அனைத்து கட்டமைப்புகளையும் ஏற்பாடு செய்வதற்கு ஜூன் மாதத்திற்குள் முடிந்த அளவிற்கு ஏற்பாடுகளை முடித்து, பேருந்து நிலையங்களை திறப்பதற்கு திட்டமிட்டிருக்கின்றோம் அல்லது ஓரிரு வாரங்கள் தள்ளிப்போனாலும் ஜூலை மாத இறுதிக்குள்ளாக நிச்சயமாக இந்த பேருந்து முனையத்தை திறப்பதற்குண்டான அனைத்து பணிகளையும் நிறைவு செய்வோம்.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தைத் திறப்பதற்குண்டானப் பணிகள் குறித்து தொடர்ந்து தினந்தினம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா அவர்களும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, அவர்களும் மற்றும் இத்துறை அதிகாரிகளுடன் இதுசம்பந்தமாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, புதிது புதிதாக தேவைப்படுகின்ற கட்டுமானப் பணிகளை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே, குறிப்பிட்டக் காலத்திற்குள்ளாக வெகுவிரைவில் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் அமைத்துத் தரப்படும். இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சட்டமன்ற உறுப்பினர்கள் (தாம்பரம்) எஸ்.ஆர்.ராஜா, (பல்லாவரம்) இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், ஆணையாளர் திருமதி. ஆர்.அழகுமீனா, பம்மல் மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி, சென்னை மாநகராட்சி ஆலந்தூர் மண்டலக் குழுத் தலைவர், சந்திரன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி , செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மேனுவல்ராஜ், முதுநிலைத் திட்ட அமைப்பாளர் திருமதி.அனுசுயா மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### சவுதி அரேபியாவில் வேலைக்குச் சென்ற ஓட்டுநர்கள் மீது தாக்குதல்!

# பாதிக்கப்பட்டவர்களை இந்தியா அழைத்துவர நடவடிக்கை எடுப்பீர்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

*சென்னை, மே 23 -*

*வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வெளியுறவுத் துறை அமைச்சர் சுப்பிரமணியம் செயசங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.*

*அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-*

*நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சீனிவாசனின் மகன் அறிவழகன், தஞ்சாவூரைச் சேர்ந்த பரமசிவத்தின் மகன் ராஜேஷ் கண்ணா மற்றும் ராமச்சந்திரனின் மகன் ராஜா, திருச்சியில் உள்ள ஏஜென்ட் மூலம் இம்மூவரும் ஓட்டுநர் வேலைக்காக சவுதி அரேபியாவுக்குச் சென்றனர். மேலும், இவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்துடன் மாதத்திற்கு 3000 ரியால்கள் சம்பளம் வழங்குவதாக முகவர் உறுதியளித்தார். இருப்பினும், சவுதியை அடைந்த பிறகு, முதலாளிகளான அப்துல் ரஹ்மான் ரியாத்காஃபில் மற்றும் அப்துல் ரஹ்மான் மைத் அவர்களுக்கு மாதம் 1500 ரியால்கள் மட்டுமே சம்பளமாக வழங்கினர் மேலும் அவர்களுக்கு சம்பளத்துடன் தங்குமிடம் மற்றும் உணவு வழங்க மறுத்து விட்டனர்.*

*மேலும் சம்பளம் குறைக்கப்பட்டது, தங்குமிடம் மற்றும் உணவு வழங்க தவறியதை ஊழியர்கள் கேள்வி எழுப்பிய போது, முதலில் ராஜா தாக்கப்பட்டு மூன்று நாட்களுக்கும் மேலாக இருட்டு அறையில் அடைக்கப்பட்டார், பின்னர் மற்ற இரு வரும் முதலாளியின் கையாட்களால் தாக்கப்பட்டனர்.*

*பாதிக்கப்பட்டவர்களின் பாஸ்போர்ட்கள் முதலாளி யால் கைப்பற்றப்பட்டு, அவை இன்னும் முதலாளி யின் பாதுகாப்பில் உள்ளன. கடந்த (14.5.2023 - ஞாயிற்றுக்கிழமை) முதலாளி களுக்கு பயந்து பாதிக்கப்பட்டவர்கள் ரியாத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் தஞ்சம் கோரினர், ஆனால் அவர்கள் தொழிலாளர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர். தொழிலாளர் நீதிமன்றம் இதனை விசாரிக்கப்படும் என்று உறுதி அளித்ததே தவிர, இடைக்கால நிவாரணம் எதுவும் வழங்கவில்லை. தற்போது, பாதிக்கப்பட்டவர்கள் சாலையில் ஆங்காங்கே மற்றும் மசூதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.*

*எனவே, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை மற்றும் பாதுகாப்பு குறித்து அவர்களது குடும்பத்தினர் ஆழ்ந்த கவலையில் இருப்பதால், பாதிக்கப்பட்டவர்களை விரைவில் இந்தியா அழைத்து வர உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கடிதத்தில் கூறியுள்ளார்.*

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதி, 65 (அ) வட்டக் கழகச் செயலாளர் என்.பவுல்ராஜ் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மேலும் மேயர் பிரியா ராஜன், கழக சட்டதிட்ட திருத்தக் குழு மாநிலச் செயலாளர் இரா.கிரிராசன் எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., பகுதிச் செயலாளர்கள் நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன் உள்ளிட்ட நிர்வாகிள், முன்னணியினர் வாழ்த்தினர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. செயற்குழுக் கூட்டம், இன்று (23.05.2023 செவ்வாய்கிழமை) காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு, தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம் எம்.பி. டி.வி.கோகுலகண்ணன், கு. மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

சட்டமன்ற தொகுதி பூத்கமிட்டி தலைமை கழக பார்வையாளர்கள் டாக்டர் சுபேர்கான் (காஞ்சிபுரம்) ஜெ.பச்சையப்பன், (உத்திரமேரூர்) கனான்ஸ்டன்டைன் ரவீந்திரன், (மதுராந்தகம்) கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், (செய்யூர்) சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே, இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக ஆக்கபணிகள்.

**க.சுந்தர்,** எம்.எல்.ஏ.

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

தலைமைச் செயலகத்தில், நேற்று (22.05.2023) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமையில், ஹஜ் புனிதபயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் முதல் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு சிறப்புச் செயலாளர் ஹனீஷ் சாப்ரா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுத் தலைவர் அப்துல் ஜப்பார், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல துணை ஆணையர் எம்.சிவகுரு பிரபாகரன், விமான நிலைய அலுவலர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்